**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 431/2022**

Prosecution witness: **2**

| | | | |
|---|---|---|---|
| Name: | ஜீவா | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1 produced on PT Warrent. A2 present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 20.06.2023

**முதல் விசாரணை**:

நான் தற்போது மதுரை மாவட்டம் வாலாந்துார் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். இதற்கு முன்னர் உத்தப்பநாயக்கனுார் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது 06.05.2021 அன்று நிலையத்தில் இருந்தபோது மதியம் 13.00 மணிக்கு எனக்கு ரகசிய தகவல் கிடைத்தது. நான் செக்காணுாரணி வட்ட ஆய்வாளருக்கு தகவலை தொலைபேசி மூலம் தெரிவித்துவிட்டு தனிஅறிக்கையை காவலர் மூலமாகவும் அனுப்பி வைத்து அவசரம் கருதி கிடைத்த ரகசிய தகவலின் பேரில் நானும், காவலர்-அலெக்ஸ்பாண்டியன் மற்றும் தங்கப்பாண்டியன் என்பவரும் நிலையத்தில் இருந்து தக்க உபகரணங்களுடன் புறப்பட்டு வத்தலக்குண்டு-உசிலம்பட்டி மெயின்ரோடு பாரத் பெட்ரோல் பல்க் அருகில் வாகன தணிக்கையில் ஈடுபட்டோம். ரகசிய தகவலாளி அடையாளம் காட்டிய வடக்கில் இருந்து தெற்காக வந்த இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருநத நபரை பார்த்து அடையாளம் காட்டி

மறைந்துகொண்டார். நான் அந்த வாகனத்தில் வந்த நபரை போலீஸ்பார்ட்டி சகிதம் வழிமறித்து தணிக்கை செய்தபோது அந்த வாகனத்தில் வந்த இரண்டு நபர்களும் தப்பிக்க முயற்சித்தார்கள். அவர்களை நாங்கள சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது வாகனத்தை ஓட்டி வந்த நபர் திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த நவீண்குமார் என்றும் பின்னால் அமர்ந்து வந்த நபர் கண்ணன் என்றும் தெரியவந்தது. பின்னர் அவர்கள் பெயர் விலாசம் கேட்டு தெரிந்துகொண்டோம். அந்த வாகனத்தின் முன் பகுதியில் வெள்ளை நிற சாக்குப்பை இருந்தது. அவர்களிடம் உங்களிடம் கஞ்சா இருபபதாக தகவல் உள்ளது உங்களை தணிக்கை செய்ய வேண்டிஇருக்கிறது என்றும் அருகில்உள்ள கோட்டாட்சியரிடமோ அல்லது அதற்கு இணையான அலுவலரிடமோ கொண்டு சென்று அவர்கள் முன்னிலையில் தணிக்கை செய்ய கோரும்படி உங்களுக்கு உரிமை உள்ளது என்று கோரியபோது போலீசாராகிய தாங்களே தணிக்கை செய்துகொள்ளலாம் என்று கூறினார்கள். தணிக்கை என்று நான் கூறுவது சோதனையாகும். நவீண்குமார் என்பவரை சோதனை செய்ய அவர் வாகனத்தின் முன் பகுதியில் வைத்திருந்த சாக்குப்பையை எடுத்து ஆஜர்படுத்தினார். அதை நாங்கள் திறந்து பார்த்தபோது நெடியுடன் கூடிய கஞ்சா இருந்தது. அதனை வில்தராசின் மூலம் நாங்கள் எடைபோட்டபோது அது 4 கிலோ இருந்தது. அதனை காவலர்கள் முன்னிலையில் அத்தாட்சியில் மாதிரிக்காக 50 கிராம் வீதம் இரண்டு பொட்டலங்கள் எடுத்து காக்கி நிற பேப்பரில் வைத்து அதற்கு S1, S2 என்று குறியீடு செய்து போலீஸ்பட்டன் சீல் வைத்தோம். மீதம் உள்ள 3 கிலோ 900 கிராம் கஞ்சாவை காக்கி நிற பேப்பரில் பொட்டலமாக கட்டி அதற்கு P1 என குறியீடு செய்தோம். பின்னர் இருசக்கரவாகனத்தின் பின்னால் அமர்ந்திருநத கண்ணன் என்பவரை மேலேகூறியபடி தணிக்கை

செய்யலாமா என்று கேட்டபோது போலீசாராகிய தாங்களே தணிக்கை செய்துகொள்ளலாம் என்று கூறினார். அவர் எடுத்து ஆஜர்படுத்திய வெள்ளை நிற சாக்குப்பையை பெற்று சோதனை செய்தபோது அதில் 2 கிலோ கஞ்சா இருந்தது. மேலும் ரூ.15,500/- அதனையும் எடுத்து ஆஜர்படுத்தினார். அந்த கஞ்சாவில் இருநது அதனை காவலர்கள் முன்னிலையில் அத்தாட்சியில் மாதிரிக்காக 50 கிராம் வீதம் இரண்டு பொட்டலங்கள் எடுத்து காக்கி நிற பேப்பரில் வைத்து அதற்கு S3, S4 என்று குறியீடு செய்து போலீஸ்பட்டன் சீல் வைத்தோம். மீதம் உள்ள 1 கிலோ 900 கிராம் கஞ்சாவை காக்கி நிற பேப்பரில் பொட்டலமாக கட்டி அதற்கு P2 என குறியீடு செய்தோம். பின்னர் எதிரிகள் இருவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களை அத்தாட்சியில் கைப்பற்றினோம். அதில் நானும் என்னுடன் வந்த காவலர்களும் எதிரி இருவரும் கையொப்பம் செய்தோம். பின்னர் உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையம் சென்று 17.45 மணிக்கு அங்கிருந்த காவல் ஆய்வாளர் அவர்களிடம் சொத்துக்களையும் எதிரியையும் ஒப்படைத்தேன் . இதுசம்பந்தமாக பிரிவு 57 ன் படியான அறிக்கையும் சமர்ப்பித்தேன். அவர் வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். ரகசிய தகவல் அ.சா.ஆ. 11 ஆகும். கஞ்சா ரோந்து செல்ல அனுமதி கோரும கடிதம் அ.சா.ஆ. 12 ஆகும். பிரிவு 57 ன் படியான விரிவான அறிக்கை அ.சா.ஆ. 13 ஆகும். பகுப்பாய்வுக்கு சென்று திரும்பி S1, S2, S3, S4 என குறியிடப்பட்ட கஞ்சா பொட்டலங்கள் முறையே சா.பொ.1 முதல் 4 ஆகும். P1 , P2 என குறியிடப்பட்ட மீதம் உள்ள கஞ்சா சா.பொ.5 மற்றும் 6 ஆகும். வழக்கில் கைப்பற்றப்பட்ட வாகனத்தின் புகைப்படம் அ.சா.ஆ. 14 ஆகும். வழக்கில் கைப்பற்றப்பட்ட ரூ.15,000/- ன் புகைப்படம் அ.சா.ஆ. 15 ஆகும்.

**(அ.சா.ஆ. 11 முதல் 15 ஆகியவை சாட்சிய ச்ட்டம் பிரிவு 65(பி)ன் படியான நிறுவனத்திற்கு உட்பட்டது என்பதால் சாட்சி மூலம் குறியிட ஆட்சேபனை செய்யப்பட்டது. தனி அறிக்கை பற்றி முதல் தகவல் அறிக்கை மற்றும் பிரிவு 57ன் படியான அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றும் எனவே, அதனையும் குறியிட ஆட்சேபனை செய்யப்பட்டது. )**

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

06.05.2021 தேதி 13.00 மணிக்கு தகவல் கிடைத்தபோது நானும் என்னுடன் வந்த காவலர்களும் நிலையத்தில் இருநதோம். எங்களுடன் அப்போது நிலைய எழுத்தரும் இருந்தார். அவர் முதல் நிலை காவலர் ஆவார். தகவல் எனக்கு நேரடியாக நிலையத்தில் ஆஜராகி கொடுக்கப்பட்டது. தகவலாளி நிலையத்தில் ஆஜராகி என்னிடம் நேரடியாக தகவல் கூறினார் என்ற விபரத்தை நான் ஆய்வாளர் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. அ.சா.ஆ.13ல் நான் தகவலை பொதுநாட்குறிப்பில் 13.15 மணிக்கு காவல் ஆய்வாளர் தாம் அயல் பணியில் இருப்பதாகவும் காலதாமதம் ஆகும் என்பதால் என்னை அப்பணியை செய்யுமாறு கூறிய உத்தரவினை 13.15 மணிக்கு பொதுநாட்குறிப்பில் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 3 (சி)ல் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்த விபரம் என்ற பகுதியில் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ. 11 ஆவணத்தை நான் தயார் செய்யததாக முதல் விசாரணையிலும், பிரிவு 57ன் படியான அறிக்கை-அ.சா.ஆ.13லும் இதர ஆவணங்களிலும் காவல் ஆய்வாளர் விசாரணையிலும் நான் கூறவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் கூறியுள்ளேள். மற்ற ஆவணங்களில் கூறவில்லை. அ.சா.ஆ்11 முதல் 13 வரையான ஆவணங்கள் இந்த வழக்கிற்காக

பின்னிட்டு தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. அதனால் தான் தகவல் பற்றிய விபரங்கள் அ.சா.ஆ. 11 முதல் 13 வரையான ஆவணங்களில் காணப்படவில்லை என்றால் சரியல்ல. நிலையத்தில் இருந்து சம்பவ இடம் சுமார் 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. நாங்கள் அவரவர் இருசக்கர வாகனத்தில் சம்பவ இடம் சென்றோம். சம்பவ இடம் பொது இடம் என்றால் சரிதான். சம்பவ இடத்தை பொறுத்து பார்வை மகஜர் மற்றும் வரைபடம் நான் தயாரிக்கவில்லை. சம்பவ இடத்தின் மேற்கே -பெட்ரோல்பல்க் உள்ளது கிழக்கே-காலிஇடம் உள்ளது. தெற்கிலும் வடக்கிலும்-மெயின் ரோடு உள்ளது. அந்த பெட்ரோல் பல்கிற்கு எரிபொருள் நிரப்ப பல வாகனங்களும் வந்து செல்லும் என்றால் சரிதான். அங்கே ஆட்களும் இருந்தார்கள். நாங்கள் அங்கிருந்தவர்களை தனி நபர் சாட்சியாக இருக்க அழைத்தோம். ஆனால் எவரும் சாட்சியாக இருக்க முன் வரவில்லை. அந்த விபரங்களை நான் தயாரித்த எந்த ஆவணங்களிலும் கூறவில்லை. அவ்வாறு அழைத்தும் வராத நபர்கள் மீது குற்ற நடவடிக்கை மேற்கொள்ள இயலும் என்றால் சரிதான். இருசக்கரவாகனம் எதிரிகளுக்கு சொந்தமானதல்ல. தனிநபருக்கு சொந்தமானது என 1ம் எதிரி கூறினார். அந்த வாகனம் தனிநபருக்கு சொந்தமானது என்பது குறித்த ஆவணங்களை பெற்று நான் விசாரிக்கவில்லை. வில்தராசு என்பது ஒரு அடி நீளமும் அகலமும் உடையது. அதில் ஒரு கொக்கி இருக்கும். அந்த கொக்கியில் எடையை பொறுத்தினால் மேலே உள்ள எடைஅளவு தெரியும் பகுதியில் இடமிருந்து வலமாக எடையின் அளவை காண்பிக்கும் அதை தான் வில் தராசு என்று கூறுகிறேன். அந்த வில்தராசு எங்களால் உரிய கால இடைவெளியில் முத்திரை மற்றும் அளவை ஆய்வாளர் அவர்களால் அதன் இயக்க தன்மை சரிபார்க்கப்பட்டு சான்றிதழ் பெறப்பட்டது என்பதற்கான ஆவணங்கள்

எங்கள் நிலையத்தில் இல்லை. சா.பொ.1-6 வரை உள்ள சான்றுப்பொருட்களில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் உள்ளது அது சிவப்பு மையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் புகைப்படம் எடுத்தோம். அ.சா.ஆ. 14 மற்றும் 15 புகைப்படங்கள் காவல் நிலையத்தில் வைத்து எடுக்கப்பட்டதாகும். சம்பவ இடத்தில் வைத்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள் வழக்கு கோப்பில் இல்லை என்றால் சரிதான். சான்றுப்பொருட்கள் 1 முதல் 6ஐ புகைப்படம் எடுக்கவில்லை. அவ்வாறு புகைப்படம் எடுக்காததற்கு சிறப்பு காரணங்கள் எதுவும் இல்லை. எதிரிகளிடம் சந்தேகம் உள்ளது உங்களை சோதனை செய்யவேண்டும் என்று நாங்கள் கூறியிருக்கிறோம். முன்னதாகவே தகவல் கிடைத்து சென்ற நிலையில் அவ்வாறு கூற தேவையில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ. 11 முதல் 13 ஆவணங்களை கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. அது காவல் நிலையத்தில் உள்ள கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. அந்த கணினி என்னுடைய பொறுப்பில் இருந்தது. அதில் தட்டச்சு செய்ய தனியே ஒரு காவலர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் பெயர் தற்போது ஞாபகம் இல்லை. அந்த கணினி எந்த நிறுவனத்தின் தயாரிப்பு என்று தற்போது ஞாபகம் இல்லை. அது நிலையான மேசையில் பயன்படுத்தும் கணினியாகும். அ.சா.ஆ.11 முதல் 13 வரையான ஆவணங்களை தயாரித்தவரை நான் சாட்சியாக குறிப்பிடவிலலை. அவரை ஆய்வாளர் விசாரித்தாரா என்று எனக்கு தெரியாது. வாகனம் மற்றும் கைப்பற்றப்பட்ட பணத்தை காவல் நிலையத்தில் உள்ள கேமரா மூலம் புகைப்படம் எடுக்கப்பட்டது. அதனை ஆய்வாளர் விசாரணையில் கூறவில்லை. நான் தயாரித்த எந்த ஆவணங்களிலும் நிலைய கேமரா மூலம் புகைப்படம் எடுக்கப்பட்டதாக கூறவில்லை. சாட்சியசட்ட பிரிவு 65(பி)ன் கீழ் சான்றிதழ்

இணைக்கப்படாத நிலையில் அ.சா.ஆ. 11 முதல் 15 வரையான ஆவணங்கள் சட்டப்படி ஆவண மதிப்பற்றது என்றால் சரியல்ல. 15.30 தயாரிக்கப்பட்ட ஒரே ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டு எதிரிகளும் கையொப்பம் இட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அத்தாட்சி 15.30 மணிக்கு தயாரிக்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். ஒரே நேரத்தில் இரண்டு அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலங்கள் தயாரிக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. இரண்டு எதிாகளுக்கும் தனித்தனியே அத்தாட்சி தயாரிக்க என்ன காரணம் என்றால் இருவரரிடம் இருநதும தனித்தனியே பொருட்கள் கைப்பற்றப்பட்டதால் இரண்டு அத்தாட்சி தயாரிக்கப்பட்டது. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் இருவரிடம் இருந்தும் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் அதனால் நான் தனித்தனியே அத்தாட்சி தயாரித்ததாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சம்பவ இடம் செல்லவில்லை என்றும் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் சொன்ன நேரத்தில் சோதனை சம்மத கடிதம் எதையும் தயார் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அவற்றிற்கு ஆதரவாக ஆவணங்களை தயாரித்து அதற்கு ஆதரவாக சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்னதுபோல் எந்த ரோந்துக்கும் செல்லவில்லை என்றும் பின்னிட்டு காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்ல பட்ட இடத்தில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் நான் புள்ளி விபர கணக்கிற்காக பதிவு செய்த வழக்கிற்கு ஆதரவாக ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட சான்றுப்பொருளுக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்திற்கு பின்னர்தான் பொருட்கள் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலம் எதிரியை அச்சுறுத்தி பெறப்பட்டதாக நீதிமன்றத்தில் கூறியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தினை நான் மறுப்பதாக எதிரிகள் நீதிதுறை நடுவரிடம் கூறினார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நிதித்துறை நடுவர் அவற்றை பதிவு செய்துள்ளார் என்றும் சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

**<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தகவலில் எதிரியின் பெயரோ, முகவரியோ கூறப்படவில்லை என்றால் சரிதான். எங்கு , எந்த வாகனத்தில், எந்த முறையில், எந்த இடத்திற்கு வருகிறார்கள் என்றும் குறிப்பாக கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ. 11 தகவல் தகவலாளி கூறுவதைபோல் இல்லாமல் அவர் கூறியதை நான் எழுதிக்கொண்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இருந்து 13.15 மணிக்கு புறப்பட்டோம். அப்போது தகவலாளி எங்களுடன் வரவில்லை. அவர் தனியே இருசக்கரவாகனத்தில் சம்பவஇடத்திற்கு வந்தார். சம்பவம் இடம் காவல் நிலையத்தில் இருந்து 5 கிலோ மீட்டர் துாரத்தில் உள்ளது. காவல் நிலையம் உத்தப்பநாயக்கனுார் ஊரின் கிழக்கு பகுதியில் உள்ளது. வத்தலக்குண்டில் இருந்து உசிலம்பட்டி செல்லும் வாகனங்கள் உத்தப்பநாயக்கனுாரை கடந்து செல்லும் என்றால் சரிதான். எதிரிகளை நான் உத்தப்பநாயக்கனுாரிலே வழிமறித்து கைது செய்திருக்க இயலும் என்றால் சரிதான். ஆனால் தகவலாளி சொன்ன இடத்திற்கு நாங்கள் சென்றோம். சம்பவ இடத்தில் சுமார் 20 நிமிடங்கள்

காத்திருந்தோம். அப்போது தகவலாளி அங்கு இருந்தார். 2 வது எதிரிக்கு சோதனை சம்மத கடிதம் மற்றும் அவர்களுடைய உரிமையை விளக்கும் அறிவிப்பு என தனித்தனியே தயாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த பகுதி ஆட்கள் நடமாட்டம் நிறைந்த பகுதி என்றால் சரியல்ல. வாகன போக்குவரத்து உள்ள பகுதியாகும். சம்பவ இடத்தின் அருகில் பாரத் பெட்ரோல் பல்க் உள்ளது. 2 ம் எதிரியை சோதனை செய்வதற்கு முன்னர் அவர் உரிமை விளக்கப்பட்டது. தனி நபர் சாட்சிகள் எவரையும் நாங்கள் அழைக்கவில்லை. சோதனை சம்மத கடிதத்தில் காவல் துறையினராகிய காவலர்கள் முன்னிலையில் சோதனை செய்ய சம்மதமா என்று அவரிடம் கேட்கவில்லை. நான் பெற்ற சோதனை சம்மத கடிதம் பிரிவு 50 ன் படியான வரைமுறைக்குட்பட்டது அல்லது என்றும் அது ஏற்கத்தக்க ஆவணம் என்றும் சொன்னால் சரியல்ல. சோதனை சம்மத கடிதத்தில் சாட்சிகளின் கையொப்பத்தின் கீழ் தேதி குறிப்பிடப்பட வில்லை என்றால் சரிதான். 2 ம்எதிரியின் கைது நமூனா ஆவணத்தை நான் தான் தயார் செய்தேன். கைதுநமூனா தயார் செய்தபின்னர் தான் அத்தாட்சி தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். அத்தாட்சி ஆவணத்தில் சம்பவ இடம் காவல் நிலையத்தில் இருந்து 8 கிலோ மீட்டர் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் யார் எடைபோட்டார்கள், எந்தவிதமான தராசில் பொருட்கள் எடைபோடப்பட்டது என்று குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் சான்றுப்பொருட்களின் மீது விபரங்கள் அடங்கிய துண்டுத்தாள் ஒட்டப்பட்டதாக குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் சாட்சிகளின் கையொப்பத்தின் கீழ் தேதி காணப்படவில்லை என்றால் சரிதான். 2 ம் எதிரியிடம் இருந்து பெறப்பட்ட பணத்தை அவரே எடுதது ஆஜர்படுத்தினார். அத்தாட்சி ஆவணத்தில் மாதிரி

முத்திரை பதிக்கப்படவில்லை என்றால் சரிதான். 2ம் எதிரியிடம் இருந்து தனியே ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு 17.45 மணிக்கு வந்தோம். எதிரிகளை இருசக்கரவாகனத்தில் உடன் வந்த காவலர்கள்-அலெக்ஸ்பாண்டியன் மற்றும் தங்கப்பாண்டியன் அழைத்து வந்தார்கள். எதிரிகள் வந்ததாக கூறப்படும் இருசக்கரவாகனத்தை டாடாஏசி வாகனத்தின் மூலம் நிலையம் கொண்டுவந்தோம். எந்த ஆவணத்திலும் டாடாஏசி வாகனத்தின் மூலம் நிலையம் கொண்டுவந்த விபரம் கூறப்படவில்லை என்றால் சரிதான். நாங்கள் காவல் நிலையம் சென்ற பின்னர் தான் ஆய்வாளர் அங்கு வந்தார். படிவம்-91 ஐ யார் தயாரித்தார்கள் என்று அதை பார்த்தால்தான் கூறமுடியும். முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்யவில்லை. தகவலை தனியாக பதிந்து, அதை தனி அறிக்கையாக ஆய்வாளருக்கு அனுப்பியதாக பிரிவு 57ன் படியான விரிவான அறிக்கையில் கூறவில்லை என்றால் சரிதான். எதிரிகளை யார் நீதிமன்ற காவலுக்கு அழைத்து சென்றார்கள் என்று ஞாபகம் இல்லை. சான்றுப்பொருட்கள் மீதோ, மீதம் உள்ள கஞ்சா மீதோ நீதித்துறை நடுவர் சுருக்கொப்பம் செய்ததாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான்.

நான் கூறியதபோல் எனக்கு தகவல் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்றும் சொன்ன நேரத்தில் சம்பவ இடம் செல்லவில்லை என்றும் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் சொன்ன நேரத்தில் சோதனை சம்மத கடிதம் எதையும் தயார் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அவற்றிற்கு ஆதரவாக ஆவணங்களை தயாரித்து அதற்கு ஆதரவாக சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்னதுபோல் எந்த ரோந்துக்கும் செல்லவில்லை என்றும் பின்னிட்டு காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில்

சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்ல பட்ட இடத்தில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் நான் பதிவு செய்த வழக்கிற்கு ஆதரவாக ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட சான்றுப்பொருளுக்கும் 2 ம் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மிரட்டி எதிரிடம் கையொப்பம் பெற்றுள்ளோம் என்றும் 2 ம் எதிரி அவர் குடும்ப விழாவிற்காக வைத்திருந்த பணத்தை கைப்பற்றியுள்ளோம் என்றால் சரியல்ல.